28.08.2025

அ.வ.எண். 110/2022

வா.சா.1 - லதா க/பெ. சுப்பிரமணியம்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 28.08.2025 is accordance with the provision of Act X of 3331

1, 4 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. 03.06.2022 அன்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபோது முத்துசாமி வாதியாக இருந்தார், அவர் தலைமையில் மற்ற வாதிகள் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கு 1ம் பிரதிவாதி மட்டும் காலஞ்சென்ற பரமசிவம் என்பவரின் வாரிசு என்று 3 ம் பிரதிவாதி வழங்கிய வாரிசு சான்றிதழ் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பரமசிவம் உடன்பிறந்தவர் பழனியப்பன். அவர் தற்போது உயிருடன் இல்லை. மேற்படி பழனியப்பனின் வாரிசுகள் தான் வழக்கு தாக்கல் செய்யும்போது இருந்த 1 முதல் 9 வாதிகள் என்றால் சரிதான்.

2. வழக்கு தாக்கல் செய்தபோது இருந்த 1 முதல் 9 வாதிகள் தான் பரமசிவத்தின் வாரிசுகள் என்று நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பானது என்றால் சரிதான். பரமசிவம் உயிருடன் இருந்தபோது அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து உயில் ஆவணமோ மற்றும் செட்டில்மெண்ட் ஆவணமோ, எதுவும் வாதிகளுக்கு ஆதரவாக ஏற்படவில்லை சரிதான். எனது பிரமாண வாக்குமூலம் பத்தி5 ல் கடந்த 22.02.2003 அன்று பரமசிவம் அவர்களின் வாரிசுகளாக எங்களுக்கு வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று மனு அளித்திருந்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றும், அதன் பின்னிட்டு மேற்படி மனுவின் பெயரில் இந்த வழக்கு தாக்கல் செய்யும்வரை ஏற்பட்ட நடவடிக்கைகள் குறித்து வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. மேலோட்டமாக விசாரித்தனர், முழுமையாக விசாரணை செய்யவில்லை.

3. சரியாக விசாரணை செய்யவில்லை என்று மேல்நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் பார்த்துகொள்ளலாம் என

விட்டுவிட்டேன். அந்த காலகட்டத்தில் பரமசிவத்திற்கு திருமணம் ஆகி 1ம் பிரதிவாதியான கௌரி என்ற மகள் இருந்தது பற்றி தெரிய வந்ததால் வாரிசு சான்றிதழ் வழங்கவில்லை என்றால் அவருக்கு திருமணம் ஆகவில்லை. கௌரி என்கிற மகள் இல்லை. அவர் இறக்குவரை பேச்சியம்மாளிடம் தான் இருந்தார். பேச்சியம்மாள் என்பவர் பரமசிவத்தின் மகள் இல்லை என்றால் சரிதான், அவர் பழனியப்பனின் மகள் ஆவார்.

4. வேலப்ப தேவர் என்பவர் பழனியப்பன் மற்றும் பரமசிவத்தின் தகப்பனார் ஆவார். வேலப்ப தேவரின் மனைவி நஞ்சக்காள் எழுதி வைத்த வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணப்படி சொத்து பழனியப்பன் மற்றும் பரமசிவத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 08.03.2022 ல் 1முதல் 9 வாதிகள் ஒரு பிரதீப் என்பவருக்கு பழனியப்ப தேவர் பாகத்தை விற்றோம் என்றால் சரிதான். மேற்படி பரமசிவம் 1995 ல் இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் 08.03.2022 கிரய பத்திரத்தில் வாதிகளான நானும், கார்த்திகேயன், சிவரஞ்சினி ஆகியோர் கையொப்பம் செய்துள்ளோம். 7, 8, 9 ஆகிய இடங்களில், நானும், எனது மகனும், மகளும் கையொப்பம் செய்துள்ளோம். **08.03.2022 தேதியிட்ட பிரதீப் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரய பத்திரம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. பி.சா.ஆ.1 சொத்து விவரத்தில் முன்பு பல்லடம் தாலூக்கா, தற்போது சூலூர் தாலுக்கா, பள்ளபாளையம் கிராமம், க.ச.எண்.273 காலையில் புஞ்சை ஏக்கர் 5.18 சதுரடி மத்தியில் ஏக்கர் 1.57 ல் பழனியப்ப னஅவர்களுக்கு பாத்தியப்பட்ட பொதுவில் சரிபாதி சொத்துக்களை மட்டும் தான் கிரயத்திற்கு கட்டுப்பட்டதாகும் என்று எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளோம் என்றால் பழனியப்பன் பாகத்தை மட்டும் விற்பனை செய்தோம். பி.சா.ஆ.1 கிரய பத்திரம் எழுதுவதற்கு முன்பாக பரமசிவத்திற்கு கௌரி என்ற மகள் இருப்பது அறிந்து தான் பழனியப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை சரிபாதி கிரயம் செய்து கொடுத்தோம் என்றால் அவ்வாறு இல்லை. கௌரி என்கிற மகள் இல்லை.

6. 1ம் வாதி முத்துசாமி, 01.06.2022 ல் வட்டாட்சியர் சூலூர் அவர்களுக்கு 1ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழை ரத்து செய்ய வேண்டி மனு

அளித்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி மனுவின் பெயரில் வட்டாட்சியர் அவர்கள் வாதி, 1ம் பிரதிவாதியை அழைத்து விசாரணை செய்தார் என்றால் சரிதான். சரியான விசாரணை நடைபெறவில்லை. 9 வாதிகளை அழைத்தனர் என்றால் ஆமாம். அவ்வாறு விசாரிக்கும்போது கிராம நிர்வாக அலுவலர், மற்றும் பள்ளபாளையம் பஞ்சாயத்து தலைவர் அவர்களை விசாரித்தனர் என்றால் சரிதான். மேலோட்டமாக விசாரணை செய்தார்கள். 1ம் பிரதிவாதி தான் பரமசிவத்தின் வாரிசு என முடிவு செய்தார்கள் என்றால் சரிதான். ஆள்பலம், மற்றும் பணபலம், செல்வாக்கை பயன்படுத்தி உத்தரவு பெற்றுள்ளார்.

7. வட்டாட்சியரின் செயல்முறை ஆணை 06.09.2022 ல் மேற்படி உத்தரவில் காலம்சென்ற பரமசிவத்தின் வாரிசு கௌரி என்று வாரிசு சான்றிதழ் வழங்கியதும் உண்மைத்தன்மை வாய்ந்தது என்று உத்தரவு பெறப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் இவ்வுத்தரவினை இடறுற்றதாக கருதினால் இவ்வுத்தரவு கிடைக்கப்பட்ட 30 நாட்களுக்குள் வருவாய் கோட்டாட்சியர் தெற்கு அவர்களிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 06.09.2022 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு 1 முதல் 3 வாதிகள் மற்றும் 1. முத்துசாமி, 2. சித்ரா, 3. ஆர்.மணி, 4. சாந்தி, 5. சுரேஷ், 6. ரமேஷ், ஆகியோர்களுக்கு நன்கு தெரியும் என்றும், மேற்படி உத்தரவில் மேல்முறையீடு செய்தால் எந்த பலனும் இல்லை என்று அறிந்து அதனால் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் அவ்வாறு இல்லை.

8. வட்டாட்சியர் விசாரணையின் போது கௌரி நேரில் ஆஜராகி கோவை புளியகுளம் வே.வெரிபாடு செட்டியார் மாநகராட்சி ஆரம்பபள்ளி, ஆவணங்களை வரவழைத்து பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் மேற்சொன்ன கொளரியை அவரது தகப்பனார் பரமசிவம், பள்ளியில் சேர்த்ததாகவும் 1980-82 முடிய 1 முதல் 3 வகுப்பு வரை படித்துள்ளார் என்பதை அறிந்து வாரிசு சான்றிதழ் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் அவ்வாறு இருக்க வாய்ப்பு இல்லை. பரமசிவத்திற்கு திருமணம் ஆகவில்லை, கௌரி என்கிற மகளும் இல்லை.

9. தாசில்தார் உத்தரவின்படி, 1. முத்துசாமி, 2. சித்ரா, 3. ஆர்.மணி, 4. சாந்தி, 5.

சுரேஷ், 6. ரமேஷ், நபர்கள் கௌரி தான் வாரிசு என்பதை ஒப்புகொண்டு மேற்கொண்டு இந்த வழக்கை நடத்த விருப்பம் தெரிவிக்காததால் தற்போதைய 1 முதல் 3 வாதிகள் வழக்கு தொடர்ந்து நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. பழனியப்ப தேவருக்கு திருமணம் ஆகவில்லை. பழனியப்ப தேவருக்கு பின்னிட்டு அவர் இறக்கும்வரை பழனியப்ப தேவரின் மகள் பேச்சியம்மாள் தான் அவரை கவனித்து வந்தார். பேச்சியம்மாள் ஜுன் 2020 ல் இறந்தார். வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் பேச்சியம்மாளுக்கு பரமசிவம் எழுதியதாகவும், பரமசிவம், பேச்சியம்மாளுக்கு எழுதியதாகவும் சொல்லும் கடிதங்கள் அவர்களால் தான் எழுதப்பட்டது என்பதை மெய்ப்பிக்க சமகாலத்தில் ஏற்படுத்தப்பட்ட கையொப்பங்கள் தாக்கல் செய்யாததால் இந்த ஆவணங்கள் ஏற்றுகொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல. கடிதம் எழுதியுள்ளதாக சொன்னார்கள்.

10. வா.சா.ஆ.2 மற்றும் 3 கடிதங்கள் எவ்வாறு என்னிடம் வந்தது என்றால் பேச்சியம்மாளிடம் இருந்தது. மேற்படி கடிதங்களில் பரமசிவத்தின் மனைவியும், மகளும் தன்னை பராமரிக்கவில்லை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். இருந்தால் தானே சொல்வார்கள். நாங்கள் பழனியப்பனுக்கு பாத்தியப்பட்ட சரிபாதி சொத்துக்களை விற்பனை செய்த பின்பு மீத சொத்தை பரமசிவத்தின் மகளான 1ம் பிரதிவாதி கௌரிக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் அடைந்து அனுபவம் செய்ய வேண்டும் என அவர் பெற்ற வாரிசு சான்றிதழ் பொய்யானது என்றும், ரத்து செய்ய வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பரமசிவத்தின் உண்மையான வாரிசுகள் நாங்கள் தான், இது நாங்கள் அனுபவம் செய்ய வேண்டிய சொத்து ஆகும்.

11. நாங்கள் உண்மையான வாரிசுகளாக இருந்திருந்தால் 10.02.1995 ல் பரமசிவம் காலமான உடன் அவரது வாரிசுகள் நாங்கள் தான் வாரிசு சான்றிதழ் மற்றும் இதர ஆவணம் பெற்று நில உரிமை ஆவணங்களிலும் பெயர் மாற்றம் செய்திருப்போம் என்றால் சரியல்ல, பழனியப்ப தேவரின் சொத்துக்களை விற்பனை செய்த பின்பு தான் கௌரி என்ற நபரே வந்தார், அதற்கு முன்பாக அவர் வரவே இல்லை. உண்மையாக நாங்கள் வாரிசுகளாக இருந்திருந்தால் பழனியப்ப தேவரின் சொத்துக்களை விற்பனை செய்த போதே பரமசிவத்தின் சொத்துககளையும்

விற்பனை செய்திருப்போம் என்றும், உண்மையான வாரிசுகளாக இல்லாததால் தான் பரமசிவத்தின் சொத்துக்களை விட்டுவிட்டு பழனியப்ப தேவரின் சொத்துக்களை விற்றுள்ளோம் என்றால் பழனியப்ப தேவரின் சொத்துக்களை வாங்கிவிட்டு, பரமசிவத்தின் பாகத்தை வாங்கிகொள்வதாக சொன்னார்.

12. பரமசிவத்திற்கு வாரிசுகள் உள்ளனரா என்று சரிபார்த்த பின்னிட்டு சொத்தை வாங்குவதாக சொன்னார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் காலஞ்சென்ற பரமசிவத்தின் உண்மையான வாரிசு என்றும், அவருக்கு வழங்கப்பட்டுள்ள வா.சா.ஆ.4 வாரிசு சான்றிதழ் உண்மையானது, சரியானது என்றால் சரியல்ல. 1. முத்துசாமி, 2. சித்ரா, 3. ஆர்.மணி, 4. சாந்தி, 5. சுரேஷ், 6. ரமேஷ், ஆகியோர் 1ம் பிரதிவாதி பரமசிவத்தின் வாரிசுகள் என ஒப்புகொண்டதால் தான் அவர்கள் 4 முதல் 9 பிரதிவாதிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்றால் சரியல்ல.

13. முத்துசாமி வகையறா வாரிசு சான்றிதழை ரத்து செய்ய கோரி பரிகாரவில்லை என்றும், அவர்கள் பரமசிவத்தின் வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றும், எனவே அவர்களையும் வாரிசாக அறிவிக்க கோரி, வழக்காட எங்களுக்கு அறுகதை இல்லை என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி கௌரி என்னுடன் பேச்சுவார்த்தை இல்லை என்றும், மற்ற பிரதிவாதிகளான 4 முதல் 9 பிரதிவாதிகளுடன் நல்ல உறவு முறையில் உள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. 2011 என் கணவர் இறந்த பின்னிட்டு நான் சூலூர் வந்தேன், அதற்கு முன்பாக கௌரி அங்கு வரவே இல்லை.

14. வா.சா.ஆ.4 வாரிசு சான்றிதழ் ஆவணம் ஏற்றுகொள்ளகூடியது என்றும், அது சரியாக விசாரணை செய்து வழங்கப்பட்ட ஆவணம் என்றும், அதனை ரத்து செய்ய வேண்டிய தேவை இல்லை என்றால் சரியல்ல. 4 முதல் 9 பிரதிவாதிகள் வழக்காட ஒத்துழைக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur